# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 92 / 2016**

திரு. ஆர். தங்கவேலு,
த/பெ இராமசாமி கவுண்டர்,
3A/2, சுவாமி சிவானந்தா சாலை,
இராசிபுரம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம். . . . . மேல் முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
சேலம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.என். காலனி, உடையார்பட்டி,
சேலம் –636 016. . . . . எதிர்மனுதாரர்

**ஆணை நாள் : 12–1–2017**

1. திரு. ஆர். தங்கவேலு, த/பெ இராமசாமி கவுண்டர், இராசிபுரம் அவர்களின் 11–11–2016 நாளிட்ட மனு, மேல்முறையீட்டு மனு எண் 92/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மின் இணைப்பு எண்.476–002–117 வீதப்பட்டி IIIBஇல் பிறப்பிக்கப்பட்ட மின்கட்டண பாக்கி ரூ.32,128/– சம்பந்தமாக நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் சார்பு நீதிமன்றம் மூலம் அப்பீல் செய்யப்பட்டு அப்பீல் தாவா AS.5/2011ல் 30.5.2011ம் நாளில் வழங்கிய தீர்ப்பில் அபராதத்தொகை சட்டப்படி செல்லதக்கது அல்ல என்று தீர்வு வழங்கப்பட்டுள்ளது. அந்த தீர்வுக்கு மேல்முறையீடு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் அவ்வழக்கு முடிவதற்கு சுமார் 10 ஆண்டுகாலம் ஆகும் என்பதால் இடைக்கால நிவாரணமாக அவருடைய புதிய விவசாய பண்ணை வீட்டிற்கு Indemnity Bond எழுதி கொடுக்க சம்மதம் என்பதால்

அவருடைய பண்ணை வீட்டிற்கு மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் கோரியுள்ளார்.

3. மேற்கண்ட மனுவின் நகல் மேற்பார்வை பொறியாளர்/சேலம் மின்பகிர்மான வட்டம் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 22.11.2016 நாளிட்ட அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. மேற்பார்வை பொறியாளர்/சேலம் மின்பகிர்மான வட்டம் அவர்கள் மேற்படி மேல்முறையீடு சம்பந்தமாக மனுதாரர் திரு.ஆர். தங்கவேல், த/பெ இராமசாமி கவுண்டர் அவர்களுடன் இருதரப்பு உடன்படிக்கை உருவாக்கும் பொருட்டு 5.1.2017 அன்று காலை 11.00 மணிக்கு சேலம் மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு இருதரப்பினருக்கும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்து அந்த உடன்பாட்டு சமரச அறிக்கையினை அசலாக சமர்ப்பித்துள்ளார். அந்த உடன்படிக்கையில் மேல்முறையீட்டாளர் திரு. ஆர். தங்கவேல், த/பெ இராமசாமி கவுண்டர் அவர்களும் எதிர்மனுதாரர் மேற்பார்வை பொறியாளர், சேலம் மின்பகிர்மான வட்டம் அவர்களும் 5.1.2017 அன்று கையொப்பம் இட்டுள்ளார்.

5. மேல்முறையீட்டாளருக்கும் எதிர்மனுதாரருக்கும் 5.1.2017ல் கையெழுத்தாகி உள்ள சமரச உடன்படிக்கையின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

"*xxx xxx xxx*

*பேச்சுவார்த்தையின்போது மனுதாரர் திரு. R. தங்கவேல், அவர்கள் மின்இணைப்பு எண்.476–002–117/*TF III B*ல் மின்கட்டண நிலுவை ரூ.32,158.00ஐ இராசிபுரம் சார்பு நீதிமன்றத்தின் AS.No.5/2011ல் வழங்கப்பட்ட தீர்ப்பின் படி மேற்படி நிலுவைத்தொகையை செலுத்த கொடுக்கப்பட்ட அறிவிப்பு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என தெரிவித்து மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டு 5 வருடங்கள் கழித்து தற்பொழுது இரண்டாவது மேல்முறையீட்டு மனு சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு எண்.SA/SRNo.42384/13.6.2016 ஆக நிலுவையில் உள்ள வழக்கு முடிய காலம் ஆகும் என்பதால் அப்பீல் தீர்ப்பு எதுவானலும் அதற்கு கட்டுப்படுவதற்கு உத்திரவாதம் கொடுக்கும் நிலையில்* Indemnity Bond *அதனை ஏற்று தன்னுடைய வீட்டிற்கு மின்இணைப்பு கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.*

*சேலம், தெற்கு கோட்டம், மல்லூர் புறநகர் பிரிவிற்குப்பட்ட கீரானூர் கிராமத்தில் இருக்கும் க.எண்.1/181, உள்ள வீட்டிற்கு மனுதார் திரு. R. தங்கவேல் என்பவர் மின்இணைப்பு கோரி மன்றத்திற்கு பெறப்பட்ட மனு தொடர்பாக அறிக்கை பெற்றதில் மனுதாரராகிய தங்களுக்கும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கும் மனுதாரராகிய தங்களின் மற்றொரு மின்இணைப்பு எண்.467–002–117 (TF-IIIB)ல் உள்ள நிலுவைத்தொகை ரூ.32158.00 தொடர்பாக வழக்கு தொடரப்பட்டு மேற்படி வழக்கு தற்பொழுது சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். SA/SRNo.42384/13.6.2016 ஆக நிலுவையில் இருந்து வருகிறது.*

*மனுதாரர் திரு. R தங்கவேல், த/பெ இராமசாமி கவுண்டர், இராசிபுரம் அவர்களது மனுவில் குறிப்பிட்டுள்ள கதவு எண்.1/181ல் கீரனூர் கிராமத்தில் உள்ள வீட்டிற்கு அத்யாவசிய தேவையை கருத்தில் கொண்டு ரூ.80.00க்கான தக்க பொறுப்பேற்பு பத்திரம் Indemnity Bond பெற்றுக்கொண்டு மின்இணைப்பு வழங்குமாறு செயற்பொறியாளர்/இபரா/தெற்கு சேலம் அவர்களுக்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்வின் அடிப்படையில் மனுமீது சமரசம் ஏற்பட்டது. ”*

**6.** மேற்கண்ட சமரச உடன்படிக்கையின்படி மேல்முறையீட்டாளர் திரு. ஆர்.தங்கவேல் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலிருக்கும் மனு எண்.*SA/SRNo.42384/ 13.6.2016ன் வழக்கு முடிய காலம் ஆகும் என்பதால் அப்பீல் தீர்ப்பு எதுவானாலும் அதற்கு கட்டுப்படுவதற்கு உத்தரவாதம் கொடுக்கும் நிலையில் Indemnity Bondஐ ஏற்று தன்னுடைய வீட்டிற்கு* மின்இணைப்பு கொடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதால் மனுதாரர் திரு. ஆர். தங்கவேல் த/பெ இராமசாமி கவுண்டர், இராசிபுரம் அவர்களது மனுவில் குறிப்பிட்டுள்ள கதவு எண்.1/181ல் கீரனூர் கிராமத்தில் உள்ள வீட்டிற்கு அத்யாவசிய தேவையை கருத்தில் கொண்டு ரூ.80/–க்கான தக்க பொறுப்பேற்பு பத்தரம் (Indemnity Bond) பெற்றுக் கொண்டு மின்இணைப்பு வழங்குமாறு செயற்பொறியாளர்/இபரா/தெற்கு/சேலம் அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அறியமுடிகிறது.

7. மேல்முறையீட்டாளருக்கும் எதிர்மனுதாரருக்கும் மேல்முறையீட்டாளரின் பண்ணை வீட்டிற்கு மின்இணைப்பு வழங்குவதில் சமரச தீர்வு ஏற்பட்டுள்ளதால் மேல்முறையீட்டு மனு எண்.92/2016 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. R. தங்கவேலு,
த/பெ இராமசாமி கவுண்டர்,
3A/2, சுவாமி சிவானந்தா சாலை,
இராசிபுரம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

2) மேற்பார்வை பொறியாளர்,
சேலம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.என். காலனி, உடையார்பட்டி,
சேலம் –636 016.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
சேலம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.என். காலனி, உடையார்பட்டி,
சேலம் –636 016.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.